புதுமலர் : 06 இதழ் : 04

ஆடி - ஆவணி

# அனல்

இணை ஆசிரியர்கள்
யோ. நிக்சன்
வே. மகாராஜா

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள் :

ஆவியிலே அனலாயிருங்கள்

கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்

ரோமர் 12:11

சீயோன் தேவாலய பிரசுரம்

ZION CHURCH PUBLICATION

01.07.2009

## பொருளடக்கம்


- அனலின் குரல்
- கதையும் கற்றதும் - ஆச்சரியமான வேதாகமம்
- எங்கே இளைப்பாறுதல்
- எதற்கு அறிக்கை - நற்செய்திப்பகுதி
- வாலிபர் வளாகம் - பினெகாஸ் இல்லையோ
- குறுக்கெழுத்துப் போட்டி - 32
- பக்தர்களின் பயிலகம்
- மூவரி முத்துக்கள்
- வித்திடும் வித்தகர்கள்
- வினாவிடை - 34
- அனலின் அருட் செய்தி - கீழ்ப்படி


## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும் வேதனையினாலும் குடும்பப் பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள் உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுதவேண்டிய விலாசம்


சீயோன் ஜெபக்குழு
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

Zion Prayer Group
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.


மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:


The Editor "Anal"
347, Navalar Road,
Jaffna, Sri Lanka.

ஆசிரியர் "அனல்"
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

T.P. : 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk


திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி. நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன், உன் விதவைகள் என்னை நம்புவார்களாக. எரேமியா 49:11



# அனலின் குரல்

கிறிஸ்துவுக்குள் பிரியமான வாசக உள்ளங்களே, மறுபடியுமாக இந்த அனலின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிகவும் சந்தோஷம்.

இந்த ஆண்டில் இதுவரையும் எம்மை தாங்கி நடத்திய கர்த்தர் செய்த ஒவ்வொரு நன்மைகளுக்காகவும், அவர் நடத்திய பாதைகளுக்காகவும், அவருடைய போஷிப்பு, பராமரிப்பு, கரிசனை, அன்பு போன்றவற்றை அளவற்ற முறையில் அவருடைய கரத்தில் இருந்து பெற்றுக் கொண்டோம். வியாதி நேரத்தில் வைத்திய ரானவர், சோர்வான நேரங்களில் தேற்றரவாளன், ஆபத்தின் நேரத்தில் அடைக்கலம், குழப்பபத்தின் மத்தியில் சமாதான காரணர், வெய்யிலின் மத்தியில் குளிர் நிழல், கைவிடப்பட்ட வேளைகளில் அரவணைப்பவர், பாவத்தை வெறுப்பவர், பாவியை நேசிப்பவர்; ஒரு முறை குழந்தையாக வந்தவர், மறுபடி ராஜாதி ராஜாவாக சீக்கிரமாய் வரப்போகின்றவர்; அவர் தான் கர்த்த ராகிய இயேசுக்கிறிஸ்து: இதை வாசிக்கும் பிரியமான சகோதரனே, சகோதரியே உன் வாழ்க்கையில் எல்லாவற்றுக் குமான பதில் இயேசுக்கிறிஸ்து தான்; உன்னால் தாங்கிக் கொள்ள முடியாத அந்த துன்பமான காரியங்களை இயேசு மீது வைத்துவிடு. இயேசுவே என் பாவங்களை மன்னித்துவிடும்; என்று உங்களை வாழ்வு, தரும் இயேசுவிடம் அர்ப்பணியுங்கள். மெய்யான சமாதானத்துக் குள்ளும், சந்தோஷத்துக்குள்ளும் அவர் உங்களை நடத்துவார்.

ஆசிரியா



கதையும் கற்றதும்

# ஆச்சரியமான வேதாகமம்

ஒரு முறை ஓர் இடத்தில் அநேக நாத்திகர்கள் ஒன்று கூடி தேவன் என்று ஒருவர் இல்லை; கடவுளே இல்லை என பேசி வாதிட்டுக் கொண்டிருந்தனர். தங்களிடம் இருந்த நாத்திக நூல்கள், தாங்கள் தேவன் இல்லை என வாதிட்டு எழுதிய நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், தேவனுடைய பிரசன்னத்தை மறுக்கும் தத்துவ நூல்கள் என்பவற்றை ஒன்றன் மேல் ஒன்றாக அங்கே இருந்த மேசை ஒன்றின் மீது வைத்தனர். இதை அருகிலே இருந்த தேவ பக்தன் ஒருவன் கவனித்தான். அவனது மனதிலே கவலை பெருகியது. அவர்களது அறியாமையையும் அந்த அறியாமையை அவர்கள் நியாயப் படுத்தக் கூறும் கருத்துக் களையும் கண்ட போது அவன் அதிர்ச்சியுற்றான். தமது வாழ்க் கையின் அடித் தளமான தேவனை, அவர்களுடைய சுவாசத்திற்கு காரணமான தேவகிரு பையை அசட்டை பண்ணுகிறார்களே என எண்ணிய வேளை அவன் உள்ளம் குமுறியது.

அவனால் அந்த நிகழ்வைப் பார்த்து பொறுமையாய் இருக்க முடியவில்லை. எழுந்து சென்று அங்கே அடுக்கப்பட்டிருந்த எல்லா புத்தகங்களுக்கும் மேலாக தனது வேதாகமத்தை வைத்து, "இந்த வேதாகமமே தலை சிறந்த நூல் தேவ வல்லமையை வெளிக்கொணரும் நூல், உண்மையும் வல்லமையும் அடங்கிய எல்லாவற்றுக்கும் மேலான நூல்" எனக் கூறினார். அங்கிருந்த நாத்திகர்கள் கோபமடைந்தனர். அங்கிருந்த ஒருவன் அந்த வேதாகமத்தை எடுத்து எல்லாப் புத்தகங்களுக்கும் கீழே வைத்து "இப்போது மகிமை எங்கே?" என்றான். பக்தன் சிரித்துக் கொண்டே "நான் வேதாகமத்தை உன்னதமான நூல் எனக் கூறினேன். ஆனால் நீரோ வேதாகமம் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படையான, அஸ்திபாரம் எனக் காட்டும் அடையாளமாக அதை எல்லாவற்றுக்கம் கீழே வைத்துள்ளீர். இதிலிருந்து என்ன தெளிவாகிறது வேதமும் தேவனும் தான் எல்லாவற்றுக்கும் அடிப்படை, சகலத்தையும் தாங்குகிறது." என்றான்.

நாத்திகன் மேலும் எரிச்சல் அடைந்தான். வேதாகமத்தை எடுத்து புத்தகங்களின் நடுவில் வைத்துவிட்டு பக்தனை ஏளனமாக பார்த்தான். பக்தன் மீண்டும் சிரித்துக் கொண்டு, "வேதாகமம் அச்சு ஆணிடை போன்றது. இந்த வேதாகமத்தின் கருத்துக்களை மையமாக வைத்தே இவ்வுலகம் சுற்றுகிறது. காரியங்கள் நடக்கிது. சகல அறிவுக்கும் நம்பிக்கைக்கும் மையம் வேதாகமமே! தேவனுடைய வல்லமையே!" என்று கூறினான். நாத்திகர்களால் பதில் ஏதும் கூறமுடியவில்லை.

பிரியமானவர்களே தேவனும் தேவன் அருளிய வேத வசனங்களும் தான் எம் வாழ்வின் எல்லாமாக இருக்க வேண்டும் தேவனுடைய வசனம் எமது வாழ்வின் தலை யாய கருத்தாகவும், அடிப்படையான அஸ்திபாரமாகவும், மையக்கருத்தாகவும் அமைந் திருந்தால் எமக்கு செழிப்பு நிச்சயம் தேவ ஆசீர் வாதம் நிச்சயம். தேவனையும் அவரு டைய வார்த்தைகளையும் இறுக பற்றிப் பிடிப்போம். நன்மையடைவோம்!! "கர்த்தரு டைய வேதத்தின் படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்" (சங் 119:1)

கெ. இன்பரூபன்

# எங்கே இளைப்பாறுதல் ?

இன்று பலர் இளைப்பாறுதல் அற்று காணப்படுகின்றீர்கள், இரவும், பகலும் உழைக்கின்றோம், அலைந்து முயற்சி செய்து, பாடசாலை சென்று, ரியூசன் சென்று இவ்விதமான அலைச்சல், தமது உல்லாசத்திற்கு என்று அலைந்து திரிபவர்கள். தமது மாமிச இச்சையை நிறைவு செய்ய அலைபவர்கள், தமது பக்தியை ஆராதனையை காட்ட அலைபவர்கள். தமது ஆடம்பரத் திற்காக அலைபவர்கள்.... இப்படி எத்தனையோ காரியங்களுக்காக அலைகின்றோம். இன்னொரு சாரார் வியாதியின் நிமித்தம் வைத்தியர்/ வைத்தியர் என அலைபவர்கள்; வேலை தேடி அலைபவர்கள் கடன்தொல்லையால் அலைப வர்கள்; இப்படி பலர் அலைகின்றோம்.

உள்ளத்தில், பாரம், விசாரம் உண்டாகும் போது எண்ணத்தில், அலை பவர்கள் இரவு எல்லாம் தூக்கமின்னை, மனதில் சேர்வு, மனதின் எண்ணம் அவர்களை அலைக்கழிக்கின்றது....

இப்படி பலதரப்பட்ட அலைச்சல்கள் யார் எமக்கு ஆறுதல் தருவார்கள் என ஏங்கும் உள்ளங்கள் பல, வருதப்பட்டு பாரம் சுமப்பவரே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள் இளைப்பாறுதல் நான் தருவேன்! என்றார் இயேசு சுவாமி. இன்று நாம் தான் தெய்வ சந்நிதிகள் தேடித் தேடி அலைகின் றோம். ஆனால், எம்மை வா என்று அழைக்கும் இயேசு சுவாமியின் கருணை தான் என்ன என்று சொல்ல.

நாம், எமக்கு வேண்டியவர்கள் புகழ் பெற்றோர், தலைவர்கள் இப்படி பலரை நாம் அழைப்பது உண்டு. இது எமக்கு கௌரவம் என நினைப்பதும் உண்டு ஏழை எளியவர், துன்புற்றோரை அழைப்பது இல்லை இவர்கள் எமக்கு அவமானம் என நினைப்போரும் உண்டு.

ஆனால், இயேசு சுவாமி எல்லோரையும் வா என்றே அழைக்கின்றார். இயேசு சுவாமி, தனக்கு பக்த கோடிகளை உருவாக்க அல்ல மாறாக எமக்கு இளைப்பாறுதல் தரவே அழைக்கின்றார். நாம், அவரிடம், அவர் தரும் இளைப பாறுதலை நடாது அவரிடம் உலகப் பொருள், பெயர், புகழ், பதவி... இப்படியான அநித்தியமானவைகளையே வேண்டி நிற்கின்றோம். ஆனால் இந்த உலககாரியம் கிடைத்த பலரின் வாழ்விலும் இளைப்பாறுதல் இல்லை. காரணம், இவற்றை கட்டிக் காக்க இவர்கள் செயற்படுவதால் இளைப்பாறுதலை இழந்து விட்டார்கள்.

பரிசுத்த வேதாகமத்தின் மாற்கு சுவிசேஷம் 5ம் அதிகாரத்தில் இளைப் பாறுதல் அற்ற ஒரு மனிதனைக் காண்கின்றோம். (வச.03) அவன் குடியிருப்பு கல்லறை ஒருவராலும் அவனை அடக்க முடியவில்லை.

இன்று அநேகரின் குடும்ப வாழ்வும் கல்லறை போன்றே காணப்படுகின்றது. அங்கே குழப்பம், நாற்றம், தேவையற்ற கழிவுகளை அங்கே எறிந்து விடுவார்கள். அசுத்த ஆவியின் பயம் மரண பயம், இப்படி இளைப்பாறுதல் அற்ற நிலைமை. இரண்டாவது கட்டுப்பாடு அற்ற வாழ்வு; தம்மையே கட்டுப்பாட்டில் வைக்கா

தோரும் பிறரால் கட்டுப்படுத்த முடியாதோரும் பலர் உண்டு. நண்பரே உமது எண்ணம், நினைவுகள், கனவுகள், இப்படிப்பல இன்று இவற்றை உம்மால் கட்டுப்பாடுகள் வைக்க முடிந்ததா? அல்லது கட்டுக்கடங்காது உம்மை அலைக்கழிக்கின்றதா. மனதிற்கு இளைப்பாறுதல் இல்லையே.

இப்படி வாழ்ந்த இவனை இயேசு சுவாமி தேடி வந்தார்; ஏன் இவனும் இளைப்பாறுதல் அடைய வேண்டுமே! ஆம் இன்று நீரும் விடுதலை அடைய வேண்டும், இளைப்பாறுதல் பெற வேண்டும் என்றே இயேசு சுவாமி உம்முடன் இப்பொழுதே பேசுகின்றார், உமது உள்ளத்தின் ஆழத்தில் அவர் சத்தம் கேட்க வில்லையா? இயேசு அவனை தேடி வந்தார், அவனே அவரை நாடி வந்தான்; தான் யார் என்று அவரிடம் கூறினான். தனக்குள் பல அசுத்த ஆவிகள் இருப்பதாக கூறினான். நண்பனே இன்று எமக்குள் அசுத்த ஆவிகள் இல்லாது இருக்கலாம், ஆனால் எத்தனை, எத்தனை அசுத்த எண்ணம் எம்மை அலைக கழிக்கின்றது. இயேசுவிடம் மனம் திறந்து நமது பாவ நிலமை, இயலாமையையும், தோல்வியையும் உண்மையாக கூறுவோமா? இந்த பிசாசு பிடித்தவன் இயேசுவை பாத்து "உன்னதமான தேவனின் குமாரன்" எனக் கண்டு கொண்டான். இன்று நானும் நீரும் அவர் உன்னதமான தேவனின் குமாரன் என்று விசுவசிக்கின்றோமா; அப்படியாயின் உமது அலைச்சல் வேதனையை அவரிடம் அறிக்கையிடும். அவர் உம்மை விடுவிக்க வல்லவர்.

இந்த பிசாசு பிடித்து இருந்தவன் புத்தி தெளிந்து வஸ்திரம் தரித்து, உட்கார்ந்து இருந்தான் என வாசிக்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் கழுவி எம்மை சுத்திகரிக்கும், நாம் அவரிடம் வரும் போது நாம் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டு எமது புத்திதெளியும் நன்மை எது தீமை எது என்று இனம் கண்டு செயல்படவும்; வஸ்திரம் தரித்து - நிர்வாணம் அற்ற நிலை, அவமானம் அற்ற நிலையை அடைந்து உட்கார முடியும். அலைச்சல் இன்றி இளைப்பாறுதல் அடைய முடியும். எனவே நாம் எமது பாவங்களை இயேசுவிடம் அறிக்கை செய்வதால் அவரே எமது உள்ளத்திற்கும் உடலுக்கும் இளைப்பாறுதலை தர வல்லவர் இயேசு கிறிஸ்துவே எமது இளைப்பாறுதல்.

போல் - கிசோ

## வினாவிடை 33 சரியான பதில்கள் எழுதியவர்கள்

01. S. மனோகரி - நீர்வேலி
02. ச. யோகேஸ்வரி - மீசாலை
03. ச. சனோஜா - மீசாலை
04. து. விதுசன் - மீசாலை
05. பொ. தயானி - காரைநகர்
06. து. தயானி - மீசாலை
07. மா. புலோமினா - கோண்டாவில்
08. றெ. மேரி கொன்சி - திருநெல்வேலி
09. நா. தர்ஷினி - யாழ்ப்பாணம்
10. S. மாக்கிறட் - மீசாலை

## வினாவிடை 33 சரியான பதில்கள்

01. தாவீது
02. சாலொமோன்
03. குதிரை
04. வாய்க்கு
05. சிம்ரி
06. பவுல்
07. எப்ராயிம்
08. யேசபேல்
09. லூசிபர்
10. லிவியாதான்

# எதற்கு அறிக்கை




ஒரு மனிதன் தன் பாவத்தை குறித்த குற்ற உணர்வினால் (குற்ற மனச்சாட்சியினால்) வாதிக்கப்படுவதே உண்மையில் அவன் அனுபவிக்கக் கூடிய பாடுகளிலெல்லாம் மிகப்பெரிய பாடாகும். அவன் அப்பாவத்திலிருந்தும், அதைக் குறித்த குற்ற உணர்விலிருந்தும் **(Guilty Feeling)** விடுதலையாக்கப்படுவதே உண்மையில் அவன் அனுபவிக்கக்கூடிய விடுதலைகளிலெல்லாம் மிகப்பெரிய விடுதலையாகும். அறிக்கை செய்யப்படாத பாவங்கள் ஒருவனில் குற்ற மனச்சாட்சியினால் உண்டாகும் குற்ற உணர்வை வருவிக்கின்றன. நீங்கள் ஒருவேளை திடீர் திகில், மரணபயம், நிராசை, உள்ளான சமாதானமின்மை, அடிக்கடி சடுதியாக வெடித்து வெளிவரும் கோபம், தூக்கம் கலைதல் ஆகியவற்றினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பீர்களாயின், அவற்றுக்கான ஒரு காரணம், அறிக்கை செய்யப்படாமல் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஏதோ ஒரு பாவமாயிருக்கக் கூடும்.

32 - ஆம் சங்கீதம் மார்டீன் லூதர் அவர்களுக்கு மிகவும் விருப்பமான ஒரு சங்கீதமாயிருந்தது. இரட்சிக்கப்படுவதற்கு முன்பு மிகவும் பொல்லாத மனுஷனாயிருந்த பரி.அகஸ்டின், தான் இரட்சிக்கப்பட்ட பின்னர் இந்தச் சங்கீதத்தைத் தன்னுடைய படுக்கையறையின் சுவரில் எழுதி வைத்து, அடிக்கடி அதை வாசித்து அழுதாராம். இச்சங்கீதம் பாவ அறிக்கையைக் குறித்த சில முக்கியமான சத்தியங்களை நமக்குப் போதிக்கிறது. அவற்றைக் குறித்து நாம் கீழே காண்போம்.

"**எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்**" (சங்.32:1) மன்னிப்பைப் பெற்ற ஜனங்கள் மெய்யாவே ஆசீர்வதிக்கப்பட்டவர்களாவர். நீங்கள் உங்கள் பாவங்களை மூடி வைக்கும் வரை, தேவன் அவைகளை மூடி மறைக்க மாட்டார். ஆனால் நீங்கள் மனஸ்தாப்பட்டு அவைகளை அறிக்கை செய்யும் போது, தேவன் உங்களைச் சுத்திகரித்து, என்றென்றைக்குமாக உங்களை மன்னித்துவிடுகிறார்.

"**எவனுடைய அக்கிரமத்தை கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான**" (சங்.32:2) "எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ" என்பது, 'எவனுடைய ஆவி முழுமையாக அறிக்கை செய்திருக்கிறதோ' என்று பொருள்படும் என Moffat மொழிபெயர்ப்பு கூறுகின்றது. 'அறிக்கை' என்னும் வார்த்தைக்குரிய கிரேக்கப்பதம் 'ஹேமோலோஜியோ' (homologeo) என்பதாகும். 'அதே காரியத்தைப் பேசு' என்பதே அதன் பொருளாகும். சிலர் அரை மனதுடன் பாவ அறிக்கை செய்கின்றனர். அதாவது, அவர்கள் தங்கள் பாவத்தை அறிக்கை செய்யும் போது, முழுமையான உண்மையைக் கூறுவதில்லை. வேறு சிலர்

தாங்கள் செய்த குற்றத்தைத் தாங்களே செய்ததாக முழுமையாக ஒத்துக் கொள்ளாமல், தங்கள் குற்றத்துக்கு வேறொருவரையோ அல்லது வேறொன்றையோ ஒரு பகுதியாவது காரணங்காட்டி குற்றப்படுத்தி அறிக்கை செய்கிறார்கள். இது, ஆரோன் ஒரு சந்தர்ப்பத்தில் செய்த அறிக்கையைப் போன்றதாகும்.அவன் இஸ்ரவேலரிடமிருந்து பொன்னைச் சேகரித்து, ''சிற்பக்கருவியினால் கருப்பிடித்து'' ஒரு பொன் கன்றுக்குட்டி வார்ப்பித்தான் (யாத் 32:4) ஆனால் மோசே அவனை வினவின போது, இவன் செய்த அறிக்கை இதுவே: ''அப்போது நான்; பொன்னுடைமை உடையவர்கள் எவர்களோ அவர்கள் அதை கழற்றித்தர கடவர்கள் என்றேன்; அவர்கள் அப்படியே செய்தார்கள்; அதை அக்கினியிலே போட்டேன், அதிலிருந்து இந்தக்கன்றுக்குட்டி வந்தது'' (வச. 24) எவ்வளவு சாமர்த்தியமாக திரித்து கூறப்பட்ட தந்திரமான அறிக்கை இது! பொன்னை அக்கினியில் போட்டது மாத்திரமே தன்னுடைய ஒரே தவறு என்பது கோலவுமே அவனுடைய அறிக்கை இருந்தது. இவ்வாறு அவன் உண்மையை மறைத்துக்கூறிய அந்த மேலோட்டமான அறிக்கையானது அவனை சற்றேறக்குறைய தேவ கோபாக்கினையை தன்மேல் வருவித்துக் கொள்ளக்கூடிய நிலைக்குள்ளாக்கிற்று என்பது ஆச்சரியமல்லவே! (உபா. 9:20,21) தங்களுடைய பாவங்களை மறைத்து, அவைகளுக்குப் பல்வேறு சாக்குப்போக்குகளை கண்டுபிடிக்க முற்படும் அனைவருக்கும் இது ஒரு எச்சரிக்கையாயிருப்பதாக!

''நான் அடக்கிவைத்தமட்டும், நித்தம் என் கதறுதலினாலே என் எலும்புகள் உலர்ந்துபோயிற்று'' (சங்.32:3); இது மற்றொரு மொழிபெயர்ப்பில் (The New Living Translation), 'நான் என்பாவத்தை அறிக்கை செய்ய முற்படும் போது, பெலவீனனும் நிர்ப்பந்தனுமானவனாகி, நாள் முழுவதும் தவித்துப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தேன்' என்று கூறப்பட்டுள்ளது. தாவீது தன் பாவங்களை அறிக்கை செய்யா திருந்த போது அதினிமித்தம் அவன் வெகு அதிகமாக பாடுபட்டான். குற்ற உணர்வினால் (Guity Feeling) வாதிக்கப்படுவதினிமித்தம் ஒருவன் அனுபவிக்கும் வேதனையானது அவனது எலும்புகள் தூளாக்கப்படுமாயின் அவன் தன் சரீரத்தில் எத்தகைய வேதனையை அனுபவிப்பானோ, அத்தகைய தாங்கொணா வேதனைக்கு ஒப்பாகும்.

''இரவும் பகலும் என்மேல் உம்முடைய கை பாரமாயிருந்ததினால், என் சாரம் உஷ்ணகால வறட்சி போல்வரண்டு போயிற்று'' (சங் 32:4) நீங்கள் உங்கள் பாவங்களை எவ்வளவு காலம் மறைத்து வைக்கிறீர்களோ அவ்வளவு காலம் அதினிமித்தம் பாடுபட வேண்டியதாயிருக்கும். கர்த்தருடைய கரம் பாரமானதாக உங்கள் மேல் விழும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டாம். ''கர்த்தரை கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள் அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்'' (ஏசயா 55:6). சிலர் சில கடுமையான வியாதிகள், விபத்துக்கள் போன்றவற்றால் அவதிப்பட்ட பின்னரே தங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, அவற்றை அறிக்கை செய்ய முன்வருகிறார்கள். ஆகிலும் எல்லா வியாதிகளும் விபத்துகளும் அறிக்கை செய்யப்படாத பாவங்களில் விளைவுகள் அல்ல.

“நான் என் அக்கிரமடத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்; என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன்; தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர்” (சங். 32:5): தாவீது கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ் செய்த ஒரு சந்தர்ப்பத்தில், அவன் தன்னுடைய பாவங்களைத் தீர்க்க தரிசியாகிய நாத்தானிடம் அறிக்கை செய்த போது, அவனுக்கு ஆறுதலும் விடுதலையும் உண்டாயிற்று.

பாவ அறிக்கையினால் உண்டாகும் விடுதலையை தெளிவிக்கும் கதை ஒன்று கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

ஒரு ஐஸ்வரியனுடைய வீட்டில் இரண்டு வேலைக்காரர்கள் இருந்தார்கள். ஒரு நாள் எஜமான் வீட்டில் இல்லாதிருந்த நேரத்தில், இளைய வேலைக்காரன் தற்செயலாக ஒரு கல்லை எறிய, அது எஜமானுடைய வாத்து ஒன்றின் மேல் பட்டு, அது செத்துப் போயிற்று. அவன் சுற்றும் முற்றும் பார்த்து, அதை ஒருவரும் காணவில்லை என்று நிச்சயித்து, அவ்வாத்தைப் புதைத்துவிட்டான். ஆனால் தான் செய்த எல்லாவற்றையும் சற்று தொலைவிலிருந்து மூத்த வேலைக்காரன் பார்த்துக்கொண்டிருந்ததைப் பின்பு அறிய வந்த அவன் மிக அதிகமாக பயமடைந்தான். அப்போது மூத்த வேலைக்காரன், ‘கவலைப்படாதே, எஜமானிடம் நான் இதைச் சொல்லமாட்டேன்’ என்று அவனிடம் உறுதியாகக் கூறவே, அவன் நிம்மதியாக தன் வேலையைத் தொடங்கினான். மறுநாள் மூத்த வேலைக்காரன் சாய்வு நாற்காலி ஒன்றில் அமர்ந்து கொண்டு, தன்னுடைய வேலையையுங்கூட சேர்த்துச் செய்யும்படி இளைய வேலைக்காரனுக்கு கட்டளை இட்டான். இளையவன் மறுத்த போது பெரியவன், ‘வாத்து...!’ என்று மெதுவாக அவனுடைய காதில் கூறவே, அவன் பயத்துடன் அன்று தங்கள் இருவருடைய வேலையையும் சேர்த்து செய்து முடித்தான். அடுத்த நாளுங்கூட மூத்த வேலைக்காரன் இப்படியே செய்தான். இவ்வண்ணமாகவே சில நாட்கள் தொடர்ந்தது. இந் நிலை தொடர்ந்து நீடித்தால் வேலைமிகுதியினால் களைப்பு மேலிட்டு, தான் மரித்துப்போகக்கூடும் என்று இளைய வேலைக்காரன் எண்ணினான். ஒருநாள் மாலையில் அவன் எஜமானிடம் சென்று, தன்னுடைய குற்றங்களைக் கண்ணீரோடு அறிக்கை செய்தான். எஜமான் அவன் மீது மனதுருகி அவனை மன்னித்து விட்டான். மறுநாள் காலையில், மூத்தவன் அவனை வழக்கம் போல் மிரட்டிய போது அவன், ‘வாத்தாவது, கீத்தாவது! நான் என்னுடைய வேலையைச் செய்வேன், நீ உன்னுடையதைச் செய்’ என்று எதிருரைத்துவிட்டான்.

மேற்காணும் கதையில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் தெளிவானதாய் இருக்கிறதல்லவா? மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு பாவம் வெளியரங்கமாகவும், மெய் மனஸ்தாபத்துடனும், சரியான விதத்திலும் அறிக்கை, செய்யப்பட்ட மாத்திரத்தில், கிறிஸ்தவ ஜீவியம் மிகவும் இலகுவானதாக மாறிவிடுகிறது. – பாவத்தினாலும், குற்ற மனப்பான்மையினாலும் உண்டாகிற பாரம் அகன்று போகிறது! நாம் எந்தெந்த பாவங்களைக் குறித்து மனஸ்தாபப்படுகிறதில்லையோ அவற்றை தேவன் மன்னிக்கிறதில்லை. ஒருவனது சரீரத்துக்குள் ஏறிய விஷம் போல அவை நம்மை ஆவிக்குரிய

பிரகாரமாகவும் சரீரப்பிரகாரமாகவும் பாதித்து, முடிவில் நம்முடைய நித்திய அழிவுக்கே வழிவகுத்துவிடும்!

''அப்பொழுது மிகுந்த ஜலப்பிரவாகும் வந்தாலும் அது அவனை அணுகாது'' (சங். 32:6): தங்களுடைய எல்லாப்பாவங்களும் அக்கிரமங்களும் தங்களை சுத்திகரித்துக் கொண்ட அனைவருக்கும் இந்த வேதபகுதி பெரும் ஆறுதலும் தைரியமும் அளிப்பதாயிருக்கிறது. நீங்கள் ஒளிவுமறைவில்லாத் தெள்ளத் தெளிவான ஒரு தூய்மையான ஜீவியம் (A Transparent Life) செய்யும் போது மிகுந்த ஜலப்பிரவாகம் (அதாவது பெரிய சோதனைகள் அல்லது உபத்திரங்கள்) வந்தாலும், அது உங்களை மேற்கொள்ள முடியாது. சோதனைகள் வரக்கூடும் ஆனாலும் பளிங்குக்கொப்பான துப்பரவான ஜீவியம் செய்யும் ஒரு கிறிஸ்தவனை எந்த சோதனையாலும் அழிக்க இயலாது.

''நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக் காத்து'' (சங்.32:7): தேவனே நமக்கு மெய்யான மறைவிடமாயிருக்கிறார். ''கர்த்தரின் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடிச் சுகமாயிருப்பான்'' (நீதி.18:10). நாம் பாவஞ்செய்து, தேவனிடமிருந்து ஓடி மறைந்து கொள்ள எத்தனித்தால், அது ஒருவன் வெய்யிலுக்கு தப்பும்படி முயற்சித்து, எரிகிற அக்கினிச்சூழைக்குள் விழுந்து விடுவது போன்றதாகும். ஆனால் நாம் நம்முடைய பாவங்களை அறிக்கை செய்து விடுவோமாகில், நம்முடைய இருதயத்தில் பெரிய மகிழ்ச்சியும் பாடலும் உண்டாயிருக்கும்.

வாசிக்கும் நண்பரே நீர் எந்த நிலையில் இருக்கிறீர். உன்பாவத்துக்காய் எப்போதாவது மனஸ்தாபப்பட்டது உண்டா? கதறி அழுத அநுபவம் உண்டா? இயேசுவிடம் அறிக்கை செய்வாயாக உன்வாழ்வில் சந்தோஷம் உண்டாகும் இன்றே ஆண்டவர் உன்னை ஆசீர்வதிப்பாராக.

## குறுக்கெழுத்துப் போட்டி 31 சரியான விடைகள்

**இடமிருந்து வலமாக**

01. அகாஸ்வேரு
03. தோ தோ
05. எலியா
06. பவுல்
10. மாராவில்

**வலமிருந்து இடமாக**

02. ஏமான்
04. சனகெரிப்
08. லாபான்
12. காயு

**மேலிருந்து கீழாக**

01. அர்தசஷ்டா
02. ஏதோம்
04. சன்பல்லாத்
07. தென்றால்
09. சோ

**கிழிருந்து மேலாக**

03. தோமா
05. எலிப்பாஸ்
11. ராகேல்
12. காபிரியேல்



# பினெகாஸ் இல்லையோ...
## Is there no Phinehas

**இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் என்சகோதரர்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள்.**

உன்வாழ்வில் அதிக தேவையுள்ளவனாக(வளாக) நீ இருக்கலாம், ஆனால் நீ அதிக தேவைவையுள்ள சபையிலே, தேசத்திலே இருக்கிறாய் என்பதை மறந்துவிடாதே. தேவனுக்காகவும் அவரது ராஜ்யப்பணியிலும் மிகவும் துடிப்புடனும் அக்கறையுடனும் செயற்பட்டு பெரும் அழிவையே நிறுத்திப்போட்ட ஒரு வாலிபனின் வாழ்விலிருந்து கற்றுக் கொள்ளும் பாடம் அனேகம்.

**இவன் யார்? ஆரோனின் பேரன்**

கனமான ஊழியத்திற்கு அழைக்கப்பட்ட ஆரோன் என வேதம் நமக்கு ஆரோனை காண்பிக்கின்றது. உங்கள் தகப்பன், தகப்பனின் தகப்பன் என்பவர்களின் வாழ்விலிருந்து நீ இதுவரைக்கும் எவற்றை கற்று அறிந்திருக்கிறாயோ முதியவர்களின் (நெருங்கிய உறவிலுள்ளவர்கள்) வாழ்வு உன் வாழ்வில் எந்த விதமான தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. அல்லது உன் வாழ்வை கசந்து போக செய்து விட்டதோ அல்லது உன் தனி வழியில் போகிறாயா? ஆரோனின் பேரன் ஆகிய இவன் தேவ பக்தியில் வளர்க்கப்பட்டவன். குடும்ப ஐக்கியத்திற்கு உட்பட்டவன்.

**பவுல் திமோத்தேவுக்கு சொல்கிறார்**

உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவு கூருவதினால் என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்தமனச்சாட்சியோடே ஆராதித்து வரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன். அந்த விசுவாசம் முந்தி உன்பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்து இருந்து; அது உனக்குள்ளும் நிலைத்து இருக்கின்றது என்று நிச்சயித்து இருக்கின்றேன். (2தீமோத்தேயு 1:4,5)

முன்னோர்களின் வாழ்விலிருந்து நீ பெற்றுக் கொண்ட காரியங்கள் என்ன அவற்றை நீ உனக்குள் வளர்க்கவும், வைத்திருக்கவும் கவனம் எடுத்தது உண்டா? அவை நீ இயேசுவை கிட்டிச்சேர துணையாக உள்ளதா?

உங்கள் முன்னோர் இயேசுக் கிறிஸ்துவுக்குள் இல்லாவிட்டால் அவர்களின் வழிகளைப் பின்பற்றவோ, கைக்கொள்ளவோ வேண்டாம். தைரியமாய் புதிய தலை முறையை உங்கள் வாழ்விலிருந்து ஆரம்பியுங்கள்; பொல்லாங்காய்தோற்றுகின்ற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். (1தெசலோ 5:22)

**சபையிலிருந்த பினெகாஸ்**

ஒரு சபையிலே இருப்பது என்பது வாலிபர்களுக்கு கஸ்ரமான காலம் இது.

**திருச்சபையில் வாலிபரின் பங்கு என்ன?**

இதை நீ சரியாகப்புரிந்து கொள்ளும் போது உன்வாலிப ஜீவியம் இயேசு விரும்பும் வண்ணமாக அமையும். உன் குடும்பம். நீ போகும் இடம், உன்னை சூழவாழ்வோர், நன்மை அடைவார்கள்; மட்டுமல்ல நீ அனேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்பாய்.

***1வது பங்கு***

தேவனை ஆராதிக்கும் தேவ ஜனங்களுடன் ஐக்கியம் கொள்ளுதல் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி சுத்த இருதயத்துடனே கர்த்தரை தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும், விசுவாசத்தையும், அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு (2 தீமோத் 2:222)

***2வது பங்கு***

தேவனுக்காக பக்தி வைராக்கியம் காண்பிப்பது (எண் 25:13) பினெகாஸ் தேவனை மகிழ்விக்கவும் அவரது உக்கிர கோபத்தை ஆற்றவும் செயலில் இறங்கினான்.

சிம்ரி, கஸ்பி இருவரையும் வேசித்தனம் பண்ணும் அறையிலே இருவருடைய வயிற்றிலும ஈட்டி உருவிப்போக அவர்களைக் குத்திப்போட்டான். அப்பொழுது வாதை நிறுத்தப் பட்டது. (எண் 25:8) தனது வாழ்வை தேவகரத்தில் முழுக்க முழுக்க அர்ப்பணித்த வாலிபர்கள் இவ்வாறே செலாற்றுவார்கள். பாவத்தை பாவமாகவே பார்ப்பார்கள்; வேறு பெயர் கொண்டு பாவத்தை அழைக்கமாட்டார்கள்.

***3வது பங்கு***

மூப்பருக்கு கீழ்ப்படியுங்கள், ஒருவருக்கு ஒருவர் கீழ்ப்படியுங்கள், மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்; பெருமை கொள்ளாதீர்கள். தாழ்மையுள்ளவர்களாயிருங்கள். இயேசுவின் பலத்த கைக்குள் அடங்கியிருங்கள், கவலைகளை இயேசுமீது வைத்துவிடுங்கள், தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள், விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். (1பேதுரு 5:5-9)

**சபையில் செயலாற்றியவன்**

தேவன் விரும்பும் பரிசுத்தத்தை நிலைநாட்ட வீறு கொண்டு எழுந்தவன் பினெகாஸ். தேவனுடைய சபையிலுள்ளவர்கள் பாவத்திலே வாழ்வதற்கு இடமளிக்காதவன் இவன்

பாவத்தை கண்டும் காணாதவன் போல் போய்விடவில்லை, பரிசுத்த வேதம் சொல்லுகிறது பினெகாஸ் கண்ட போது (எண் 25:7)

பாவமான காரியங்களைக் காணும்போது தேவனின் நிமித்தமாக பக்திவைராக்கியம் காண்பிக்கிறாயோ? அல்லது போனால் மறுபுறம் திரும்பி போய் விடுகின்றாயோ?

- இது எனது வேலையில்லை.
- அவர்கள் எப்படியும் வாழ்ந்துவிட்டுப் போகட்டும்.
- நான் மட்டும் சரியாய் இருந்தால் சரி அவர்கள் பாவத்தில் வாழ்வது அவர்களின் விருப்பம்.
- வயதுக்கு மூத்தவர்கள், இளையவர்கள் பாவம்செய்தால் நான் எப்படி தடுத்து தட்டி கேட்பது என்று மயங்கிய நிலையை அடைகின்றாயா.

**யோவான்ஸ் நானனுடைய தலைபோக காரணம் என்ன தெரியுமா?**

ஏரோது தன் சகோதரனாகிய பிலிப்புவின் மனைவியை வைத்துக்கொள்வது நியாயமல்லவென்று அவன் ஏரோதுக்கு சொல்லியிருந்தான். (மத்தேயு 14:3,4) அவனுக்கு கிடைத்தது; அவனது தலை அவனை விட்டு சீவப்பட்டது. சாட்சியாக மரித்தான் சத்தியத்தை இறுதிவரை பறைசாற்றினான். ஏன் நீ இப்படி இருக்கக்கூடாது?

எப்போது உன் பக்தி, வைராக்கியத்தை சபையும், உலகமும் கண்டு கொள்ளப் போகிறது. தம்பி, தங்கச்சி இதுவே காலம் எழும்பு இருக்கின்ற பெலத்தோடே வா! அவர் உன்னை இடைக்கட்டுவார். நிலை நிறுத்துவார். பாவத்தில் வாழ்வோரை கிறிஸ்து பக்கமும், ஜீவனின் பக்கமும் கொண்டுவரும் பினெகாசுகள் இன்றைக்கு உண்மையான தேவையாயுள்ளது.

**பரிசுக்கு உரியவன் பினெகாஸ்**

நித்திய ஆசாரியப் பட்டத்துக்குரியவன் (அவனுக்கும் அவனுக்குப் பின்வரும் சந்ததிக்கும்)

வாலிபத்தை மிகவும் கவனமாக ஓடி அதை கனமுள்ளதாய்காத்து கிறிஸ்துவுக்காய் பக்திவைராக்கியம் காட்டுவாயானால் உன் சந்ததியே அவரின் ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள பாத்திரமுள்ளதாய் மாறும். இன்றே நீ தீர்மானித்துக் கொள் நீ இருக்கும் இடம் எதுவாகவும் இருக்கலாம். இந்த வாலிபனைப்போல் பரிசுத்தத்தை உன் சிந்தையாக அணிந்து கொள் சாட்டுப் போக்கு சொல்லாதே.

இன்றைய பிரதானமான தேவை இதுவாகவே இருக்கின்றது. திருச்சபையில் வாலிபர்கள் பினெகாஸ் போன்று எழுந்து நின்று தேவனை உயர்த்தி நிற்பதே மேலானதாகும். இப்படிப்பட்ட வாலிபர்களையே தேவன் இலங்கையின் எழுப்புதலுக்காய் தேடுகிறார்.

**நீ என்ன பதில் அவருக்கு கூறுகிறாய்? சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன்.**

**வேதநாயகம் சுமணன்.**

# குறுக்கெழுத்துப் போட்டி - 32



### இடமிருந்து வலமாக

01. கர்த்தருடைய மகிமை கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பினதினால் ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்க கூடாதிருந்தது; இந்த ஆலயம் எது?
03. இது கூவுமுதல் என்னை 3 முறை மறுதலிப்பாய் என இயேசு பேதுருவிடம் கூறினார்.
05. தேவனோடு நடந்தவன்.

### மேலிருந்து கீழாக

02. இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தியவர்?
04. எங்களுடைய சரீரம் தேவனுடைய ................ ஆக இருக்கிறது.
03. நிறைக்காக வேதாகமத்தில் பயன்படுத்தப்படும் சொல்?

### வலமிருந்து இடமாக

06. இஸ்ரவேலர்களிடம் எகிப்தியர் வேலை வாங்கிய போது இதை சுமக்கவும் செய்தனர்.
07. கர்த்தர் என்னுடைய ............ யுத்தத்துக்குப் பழக்குவிக்கிறார் என சங்கீதக் காரன் சொல்லுகிறான்.
08. உன் சத்துரு இப்படி இருந்தால் ஆகாரம் கொடு.

### கீழிருந்து மேலாக

05. எலியாவின் கரங்களுக்குத் தண்ணீர் வார்த்தவன்.
07. இது தேவனுடைய வார்த்தைக்கு ஒப்பிடப்படுகின்றது
09. தானியேலும் அவனுடைய நண்பர்களினதும் முகங்கள் இப்படியுள்ளதாக காணப்பட்டது.



# பக்தர்களின் பயிலகம்

-தொடர்ச்சி-

*கர்த்தருடைய மகிமையில் பிரவேசித்த போதகர், இன்பரூபன் அவர்களின் குறிப்பில் இருந்து எடுக்கப்பட்டது. பரலோகம் பற்றிய இந்த வேதப்படிப்பின் இறுதிப்பகுதி*

## 12. சுகந்தி

பரலோகத்தில் எல்லாக் கண்களும் சிங்காசனத்தை நோக்குவது தெரிகின்றது. சிங்காசனத்தை நோக்குவது மாத்திரமல்ல வச 11 படி துதித்தார்கள். உலகத்தில் காணப்படும் இன்பங்களின் இன்பம். ஆனந்தத்தின் ஆனந்தம் என்னவெனில் ஆத்துமா தேவனை துதிப்பதில் சொக்கிப் போவதும் மூழ்கிப்போவதும் ஆகும். இது பாவ மன்னிப்பாகிய மீட்பு தந்த பாக்கியம். இவ்வுலகத்தில் துதியானது ஓர் ஒத்திகை போன்றது. பரலோகத்தில் தான் அதன் உண்மையான அரங்கேற்றம். வெளி 4ல் போற்றப்படுபவர் சிருஷ்டி கர்த்தர். அடுத்த அதிகாரத்தில் ஆராதனைக்குரியவராக ஆட்டுக் குட்டியானவர் வருகிறார். வெளி 5ல் காணப்படும் துதியானது வெளி 4ல் காணப்படும் துதியை விஞ்சி நிற்பதைக்காணலாம். அது அளவில் தொகையில் இரண்டு அதிகாரங்களும 24 மூப்பர்களும் 4 ஜீவன்களும் துதியில் ஈடுபட்டிருப்பதைக் காட்டுகிறது.

ஆனால் வெளிப்படுத்தல் 5 இன்னும் அதிகப்படியான அனேக தூதர்களைக் காண்பிக்கின்றது. அவர்கள் இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும் ஆயிரம் ஆயிரமாகவும் இருந்தது. இவர்கள் எல்லோரும் சிங்காசனத்தைச் சூழ நின்று மகா சத்தமிட்டு ஆட்டுக்குட்டியானவரைத் துதித்தார்கள். இவ்வித அனுபவத்திற்குள் இருப்போருக்கு இன்னோர் பாக்கியம் தேவனிடமிருந்து கிட்டும். அப் 2:28 "உம்முடைய சந்நிதானத்திலே என்னை சந்தோசத்தால் நிரப்புவீர்."புதிய ஏற்பாட்டில் பரலோகத்தோடு சந்தோசம் இணைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். லூக்கா 15:7 பரலோகத்தில் மிகுந்த சந்தோசம்! லூக் 15:10 தேவனுடைய தூதர்களுக்கு முன்பாக சந்தோசம்! மத் 25:21 உன் எஜமானுடைய சந்தோசத்திற்குள் பிரவேசி. உலகத்தில் நாம் அன்றாடம் சந்திக்கும் சம்பவங்கள் எம் சந்தோசத்தைக் கொள்ளையடித்துச் செல்கின்றன. ஆனால் தேவனுடைய பிள்ளைகளே கலங்காதேயுங்கள். பரலோகம்

உங்களுக்கும் சந்தோஷத்தை வைத்திருக்கின்றது. சாராள் கேட்டாள் எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ ஆதி 21:6ல் தேவன் என்னை நகைக்கப்பண்ணினார். என்றாள் சந்தோசத்தின் அறிகுறியே நகைப்பு

தேவன் இந்த உலகத்திலேயே வைத்து சாராளுக்கு சந்தோசத்தைக் கொடுத்தார். இதற்கு காரணம் ஈசாக்கு இந்த ஈசாக்கு இயேசுவுக்கு அடையாளமானவன் ஈசாக்கின் மூலம் சாராளுக்கு சந்தோசமானால், இயேசுவின் மூலம் உங்களுக்கு சந்தோசம் எவ்வளவு நிச்சயம் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். சாராளுக்குச் செய்தபடி தேவன் இந்த உலகத்திலும் உங்களை சந்தோசத்தினால் நிரப்புவார். எனவே பரலோகத்தை குறித்த இத்தொடரான வேதப்படிப்பில் பரலோகத்திலே காணப்படும் பன்னிரண்டு வகையான இரத்தினங்களும் எமக்கு பன்னிரண்டு வகையான செய்திகளைத் தந்துள்ளன.

01. வச்சிரக்கல் : இது ஞானத்தைக் குறிக்கின்றது. தேவனின் ஈவாகிய கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் ஞானமுள்ளவர்கள்

02. இந்திர நீலம் : இது மனந்திரும்புதலைக் குறிக்கின்றது. மனம் திரும்பியவர்கள் மாத்திரமே பரலோகமாகிய திருநகரத்திற்குள் நுளையமுடியும்.

03. சந்திர காந்தம் : இது துன்பம் விரட்டப்பட்டதைக் காண்பிக்கிறது. பரலோகத்தில் மனம் உடைந்தவர்கள் யாரும் இல்லை.

04. மரகதம் : பரலோகத்தில் கள்ளத்தனமானவை இல்லை, மாய்மாலம் இல்லை

05. கோமேதகம் : திருமணமான மகிழ்ச்சி.

06. பதுமகரம் : இது சாவாமல் பிளைப்பது.

07. சுவர்ண ரத்தினம் : தீமையான உணர்வுகளில் இருந்து விடுதலை பெற்றவர்களே பரலோகம் போகலாம்.

08. படிகப்பச்சை : என்றென்றும் இளமையும், மகிழ்ச்சியுமாக இருத்தல்

09. புஷ்பராகம் : நட்பும் நன்றியுள்ள தன்மையையும் காட்டுகின்றது.

10. வைடூரியம் : பாக்கிய நிலையை காண்பிக்கின்றது.

11. சுநீரம் : தரங்குறையாத நிலையும் தேவமகிமையும்

12. சுகந்தி : மதுபானத்தில் மயங்கி இருப்போருக்கு தேவன் கொடுக்கும் விடுதலை என்பதைக் கற்றுக் கொண்டோம்.

தேவனுடைய மகிமையில் பிரவேசித்த போதகர் இன்பரூபன் அவர்களின் தொகுப்பில் இருந்து பத்தொன்பது பகுதிகளாக பரலோகம் பற்றிய இவ் வேதப்படிப்பு வெளிவர கத்தர் கிருபை செய்தார். பரலோகம் செல்லவேண்டுமா? அப்படியானால் இப்பன்னிரண்டு இரத்தினங்களின் அர்த்தத்தை புரிந்து அதன் பிரகாரம் வாழ்வோம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

முற்றும்

# மூவரி முத்துக்கள்

உள்ளத்தின் உடைவின்
வெளிப்பாடு
கண்ணீர்

மறைவுகளின் சதிகள்
மலிவாகும்
ஜெயச்சந்தையிலே

ஒரு முறை வந்தால்
வராதது
வாழ்க்கை

சத்தியத்தின் நாற்றுக்கள்
விதைத்திடும் மேடை
இதயங்களே

பாதாளம் பாதிக்காத
பரிசுத்த மறைவிடம்
சபை

சத்துருக்களுக்கு
பதிலடி
நேசிப்பதே

மறையாத சூரியன்
தேவனின்
வார்த்தை

வாழ்க்கையின்
கேள்விகளின் முடிவுகள்
தேவனே

மடியும் தருவாயிலும்
மறையாதது
உண்மை

விசுவாசிகள் வளர்ந்தால்
விடைகள்
விசுவாசத்திலிருந்தே வரும்

# வித்திடும் வித்தகர்கள்

## ஹட்சன் டெய்லர்

தொடர்ச்சி

### அலைச்சல்கள்

ஒரு வாரம் கழித்து பெற்றோருக்கு வந்து சேர்ந்த கடிதம் அங்குள்ள நிகழ்ச்சிகளைத் தெளிவாக சித்தரித்தது.

"கால் தரையில் ஊன்றி நடக்க முடியாதவர்கள் விரைவில் சுகமடைவதையும், கண சம்பந்தமான நோய்கள் நீங்குவதையும், கொடிய காய்ச்சல், நுரையீரல் சம்பந்தமான காசநோய்கள் நீங்குவதையும் கண்டு பொறாமை கொண்ட இரு டாக்டர்மார்களும், நான்கு மருந்து கடைக்காரர்களும் என் பேரில் நகர அதிகாரிக்குப் புகார் கொடுத்திருந்தனர்.

"ஒரு நாள் நான் சாங்கைக்குச் சென்று திரும்பியதும் அச்செய்தியைக் கேள்வியுற்றேன். எனினும் தொடர்ந்து நோயாளிகளைக் கவனித்து நற்செய்தியை அறிவித்து வந்தேன்.

ஹட்சன் சட்டத்துக்கு விரோதமாய் சிங் – காய் – கோ என்னமிடத்தில் வசித்து, அங்கு தன் பணியாள்கள் பெயரில் ஒரு மருத்துவமனை வைத்திருப்பதாக புகார் வந்திருப்பதால் உடனடியாக பிரிட்டிஷ் காரியாலயத்துக்கு வர வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றார். உடனடியாக ஹட்சன் அங்கு சென்றார். அங்கு கடுமையாக எச்சரிக்கப்பட்டார். மீண்டும் அங்கு சென்றால் 500 டாலர்கள் அபராதம் கொடுக்க வேண்டும் என்றும் உடனடியாக ட்ஷங்மிங் என்ற திவிலிருந்து சாங்கைக்குத் தன் பொருள்களுடன் புறப்பட்டு வரவேண்டும் என்றும் கட்டளை பெற்றார்.

வேறு வழியின்றி ஹட்சன் தன் வீட்டை விட்டு திரும்பவும் சாங்கைக்கு வந்தார். அப்போது ஹட்சன், வில்லியம் பார்ன்ஸ் என்ற தீவிர மிஷனெரி சீனாவுக்கு வந்திருப்பதாக அறிந்தார். ஹட்சனின் மனம் அவரைச் சந்தித்து ஆறுதல் பெறவேண்டும் என்று ஏங்கியது.

தேவ கிருபையால் சில நாள்களில் அவரைக் கண்டுபிடித்தார். பின்னர் இருவரும் இரண்டு படகுகளில் பணியாள்களோடு நான்சின் என்ற இடத்துக்கு மிஷனெரி சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். கிறிஸ்து பிறப்பையும், புதுவருடப்பிறப்பு தினத்தையும் அங்கேயே கழித்தனர். வில்லியம் பார்ன்ஸூம், ஹட்சனும் சில நேரங்களில் தனித்தனியாக பிரிந்து பிரசங்கித்தனர். பார்ன்ஸ் மக்கள் கூடி நிற்கும் இடங்களிளெல்லாம் பிரசங்கிக்க ஆரம்பித்துவிடுவார். கோயில்கள் பள்ளிகள் எங்கும் சென்று 41 நாள்கள் பிரசங்கித்தனர். மீண்டும் தருணம் கிடைத்தால் அங்கு வருவதாகக்கூறி திரும்பினார்கள்.

அடிக்கடி, வில்லியம் பார்ன்ஸ் தன் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களைச் சொல்வார். ஒரு தடவை அயர்லாந்து மக்கள் அவர் பிரசங்கிக்கையில் சூழ்ந்து கொல்ல நினைத்ததைச் சொன்னார். பாவத்தைக் குறித்து கண்டித்து பேசுகையில்; எந்தப் பெலவானும் தலை குனிந்து நிற்பான். எப்போதும் தேவ பிரசன்னத்தின் உணர்வோடேயே பேசுவார். எனவே அவர் பேசுகையில் யாவரும் அசைக்கப்படுவர். அவரோ தன்னைத் தேவகிருபையால் நிரப்ப இரவெல்லாம் ஜெபிப்பார். பகல் வேளைகளிலும் ஜெபிப்பார். தனிமையாய்த் தவித்த ஹட்சனுக்கு வில்லியம் பார்ன்ஸின் அன்பும், பரந்த நோக்கும் பெருந்துணையாய் இருந்தது.

"தேவ வார்த்தைகளை ஆகாரமாகவும், ஜெபத்தை மூச்சாகவும் கொண்டிருக்கையில் மட்டுமெ தேவனைப்பற்றிய செய்தியைக் கொடிக்க முடியும். ஒரு மனிதன் உள்ளத்தில் கிறிஸ்து இருப்பாரானால் அவனை விட பாக்கியசாலி வேறு எவரும் இல்லை" என்று அடிக்கடி ஹட்சன் சொல்லுவார்.

தொடரும்

## வினாவிடை - 34

01. பன்றியின் மூக்கிலுள்ள பொன் மூக்குத்திக்கு சமானமாயிருப்பவள் யார்?
02. கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரள திரும்புகின்றது என்று சொன்னவர் யார்?
03. கட்டிலில் ஒரு சுருபத்தை வைத்து அதை துப்பட்டியினால் மூடி வைத்தவள் யார்?
04. தேவ வசனத்தை கேட்க ஆசையாயிருந்த விவேகமுள்ள அதிபதி யார்?
05. பூமியின் ராஜாக்களுக்கு அதிபர் யார்?
06. கைகால்களைத் தறித்து தூக்கிலே போடப்பட்ட இருவர் யார்? யார்?
07. ஏழைகளின் நியாயத்தை கவனித்தறிகிறவன் யார்?
08. நியாயத்தை நஞ்சாக மாற்றினவர்கள் யார்?
09. குளிர்ந்த மனமுள்ளவன் யார்?
10. சூரியனைப் போல பிரகாசமாயிருக்கிறவள் யார்?

## குறுக்கெழுத்துப்போட்டி 31 சரியான பதில்கள் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 01. S. மனோகரி | நீர்வேலி | 06. து. விதுசன் | மீசாலை |
| 02. அ. கிங்ஷா | வவுனியா | 07. பொ. தயானி | காரைநகர் |
| 03. மு. சதிகா | புங்குடுதீவு | 08. து. துயானி | மீசாலை |
| 04.ச. யோகேஸ்வரி | மீசாலை | 09. மா. புலோமினா | கோண்டாவில் |
| 05. ச. சனோஜா | மீசாலை | 10. S. மாக்கிரட் | மீசாலை |

# அனலின் ஆன்மீக விருந்து

## கீழ்ப்படி

1சாமுவேல் 15ம் அதிகாரத்தில் உள்ள சம்பவத்தினை நாம் பார்க்கும் போது சவுலை தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு ராஜாவாக அபிஷேகம் பண்ணிய பிற்பாடு தேவ மனுஷனாகிய சாமுவேல் தீர்க்கதரிசிக்கூடாக சவுல் ராஜாவுக்கு ஒரு செய்தியை அனுப்புகிறார். அந்த செய்தி என்னவென்றால் 1சாமுவேல் 15:3 இப் போதும் நீ போய் அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன் மேல் இரக்கம் வைக்காமல் புருசரையும், ஸ்திரிகளையும், பிள்ளை களையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும் கொன்று போடக்கடவாய் என்கிறார் என்று சொன்னான்.

இவ்விதமாக தேவன் ஒரு பட்டியலைக் கொடுத்ததற்குக் காரணம் முற்றிலுமாக சங்கரிக்க வேண்டும்; என்பதை சவுல் மறந்து விடக்கூடாது என்பதனாலேயே இதைச் செய்தார். ஆனால் சவுலோ தேவனுடைய வார்த்தையை நிறைவேற்றுவதில் தவறிவிட்டான். 1சாமுவேல் 15:3 சவுலும் ஜனங்களும், ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாம் தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும் நலமான எல்லாவற்றையும் அழித்துப்போட மனமில்லாமல் தப்பவைத்து, அற்பமானவை களும் உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான். இவ்விதம் சவுல் செய்ததை தேவன் அங்கிகரிக்கவில்லை. தன்னுடைய தாசனாகிய சாமுவேலிடம் தேவன் இவ்விதமாய் கூறினார். 1சாமுவேல் 15:11 நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. அவன் என்னை விட்டுத் திரும்பி என் வார்த்தைகளை நிறைவேற்றாமல் போனான் என்றான். அப்போது சாமுவேல் மனம் நொந்து இராமுழுதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். 1சாமுவேல் 15:3 சாமுவேல் சவுலினிடத்தில் போனான். சவுல் அவனை நோக்கி நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர், கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்றான். சவுல் தான் செய்த எல்லா காரியங்களையும் மறைத்துவிட்டு தேவன் சொன்ன எல்லா காரியங்களையும் தான் செய்தேன் எனக் கூறினான். ஆனால் சாமுவேலுக்கு தேவன் அவனுடைய எல்லாக் காரியங்களையும் வெளிப்படுத்தியதை அவன் அறியவில்லை. சாமுவேலோ எல்லா வற்றையும் அறிந்தவனாக (1சாமுவேல் 15:14) அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும் எனக்கு கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். இன்றைக்கு மற்றவர்களுடன் பகை, சண்டை வேண்டாம் மற்றவர்களைக் குறைகூற வேண்டாம் என்று போதகர் கூறுவார்; ஆனாலும் நாம் அதை செய்துவிட்டு செய்யாதவர்கள் போல் மேல்பூச்சுப் பூசிக்காட்டுவோம். இவர்கள் சண்டைபிடிக்கிறவர்கள், அவரை குறித்து சபை தலைமைத்துவத்தைக் குறித்து குறை கூறுகிறவர் என்றெல்லாம் போதகரின்

காதில் விழும். இதுதான் ஆடுகளின் சத்தம். மாடுகளின் சத்தம் சவுல் சாமுவேலுக்கு மறைக்க முடியவில்லை. அவன் தேவனுக்கே மறைக்க முற்படுகிறான். தேவன் எல்லாவற்றையும் காண்கிறவராய் இருக்கிறார். அதனால் சவுலையும் கண்டார். இந்த உண்மையை சாமுவேல் அறிந்த பிற்பாடு சவுல் அதற்கு ஒரு காரணத்தைக் காண்பித்தார். 1சாமுவேல் 15:15 ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள். மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம். என்றான். இப்போது சவுல் ஜனங்களை குற்றம் சாட்டுகின்றான். 1சாமுவேல் 10:27 ஆனாலும் பேலியாளின் மக்கள் இவனா நம்மை இரட்சிக்கப் போகிறவன், என்று சொல்லி அவனுக்கு காணிக்கை கொண்டு வராமல் அவனை அசட்டைபண்ணினார்கள். அவனோ காது கேளாதவன் போல் இருந்தான். இவ்விதம் ஜனங்கள் கூறியதை கேளாதவன் போல் இருந்த சவுல் பிற்பாடு ஜனங்கள் தான் தப்பவிட்டார்கள் என ஜனங்களை குற்றம் சாட்டுகிறான். இந்தக் குற்றச்சாட்டை தேவன் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை, இவ்விதமாக கூறிய சவுலுக்கு தேவன் தன்னுடைய தாசனாகிய சாமுவேலுக்கூடாக இந்தக் காரியத்தைக் கூறுகின்றார் 1சாமுவேல் 15:22 அதற்கு சாமுவேல் கர்த்தருடைய சத்தத்துக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் சர்வாங்க தனங்களும், பலிகளும் கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம். சவுல் ஒரு ராஜாவாக இருந்து என்ன காரியங்களைச் செய்தாலும் தேவன் எதிர்பார்க்கிற கீழ்ப்படிதலும், செவிமடுத்தலும் அவனிடம் இருக்கவில்லை. இங்கு தேவன் விரும்பிய காரியமானது, தான் சாமுவேல் மூலமாக ராஜாவாகிய சவுலுக்கு சொன்னதை அவன் நிறைவேற்ற வேண்டும். ஆனால் அவனோ அதை நிறைவேற்றவில்லை. ஆண்டவர் எதிர்பார்க்கிற காரியம், தான் ஏற்படுமுத்திய மேய்ப்பர்கள், போதகரின் ஆலோசனை வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். தேவன் எனக்குச் சொல்லவில்லை, போதகர்தானே சொன்னார், இவர் என்ன சொல்லுகிறார், இவருக்கு அனுபவம் குறைவு என்று பல குறை கூறி, நாம் ஜெபித்து வேதம் வாசித்து மற்றவர்களுக்கு புத்தி சொல்லி காணிக்கை, தசமபாகம் கொடுததாலும் அவை பிரஜோயனம் இல்லை. தெளிவாகத் தேவன் சொல்லுகிறார் கீழ்ப்படி.

செம்மறி ஆடு தன் மேய்ப்பன் காட்டும் புல்லையும், தண்ணீரையம் தான் குடிக்கும். அது தானாக போய் புல் தேடி தண்ணீர் குடிக்காது. எனக்கு புல் தெரியும், வேதம் நன்றாய படித்திருக்கிறேன். எனக்கு நல்ல தண்ணீர் எங்கு இருக்கு என்று தெரியும், என்போமானால் நாம் பலிகள், தகனங்கள் செலுத்திக் கீழ்படியாமல் இருக்கிற வெள்ளாடுகளே. போதகரின் சத்தத்துக்கு கீழ்ப்படிவதைப் பார்க்கிலும் உங்கள் காணிக்கைகளோ ஜெபமோ, வேதவாசிப்போ கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ? இருக்கவே இருக்காது ஜாக்கிரதை.

John Bevere என்ற ஆசிரியர் எழுதிய (Intimidation) பயமுறத்தல் என்ற ஆங்கில பதத்தில் ஆழமான காரியங்கள் குறிப்பிடப்படுகிறது. இந்தச் செய்தியை ஆயத்தப்படுத்தும் போது இப்புத்தகத்தில் இருக்கும் ஓர் சம்பவம் எனக்குப்பதிந்தது. ஒரு சபையிலே ஒரு பெண்மணி அன்னிய பாஷை பேசினாள் அதற்கு அங்கிருந்த ஆண் வியாக்கியானம் கொடுத்தார். அப்போது அந்த சபை போதகருக்கு (John Bevere) அவர்களை அதட்டு என்று ஆண்டவர் சொன்னார். ஆனால் போதகர் அதட்ட முற்படவில்லை. திரும்பவும் ஆண்டவர் அவர்களை அதட்டு என்றார். ஆனால் போதகர்

அதை செய்யவில்லை. பிரசங்கத்தை ஆரம்பித்தார். ஆராதனையில் பரிசுத்த ஆவியின அனலை அவரால் உணரமுடியவில்லை; ஏனோ தானோ என்று ஆராதனையை முடித்து விட்டு வீட்டுக்குச் சென்றார். அங்கு போய் ஆண்டவரே ஏன் இன்று ஆராதனை வெறுமையாய் இருந்தது. என்று ஜெபம் பண்ணினார். அப்போது ஆண்டவர் சொன்னார் அவர்களை அதட்டு என்று உனக்குச் சொன்னேன். ஆனால் நீயோ அதைச் செய்ய வில்லை அதனால் அந்த அந்நிய ஆவிக்கு முக்கியத்துவம் கொடுத்த அந்த அன்னிய ஆவி ஆராதனை முழுவதையும் வழி நடத்த அனுமதி கொடுத்து விட்டாய் என்றார்.

1தீமோத்தேயு 5:17 இப்படி போதகர், ஊழியர் இரட்டிப்பான கனத்துக்குரியவர் அவர் யாராக இருந்தாலும் தேவன் அவரை உங்கள் மேல் அதிகாரியாக நியமிக்கிறார். மேய்ப்பனுக்கு செம்மறி ஆடுமேல் முழு அதிகாரமும் உண்டு. அதேபோல தான் உங்கள் போதகருக்கு உங்கள் மேல் முழு அதிகாரமும் உண்டு. உங்களை தண்டிக்கவும் அதி காரம் உண்டு. யாரும் போதகருக்கு சொல்ல முடியாது என் தனிப்பட்ட காரியத்தில் கை போட முடியாது. போதகர் சில வேளை சகோதரனாக, மருமகனாக, மாமனாக, தகப்பனாக எப்படிப்பட்டவராக இருந்தாலும் இப்போது அதாவது போதகரான பின்பு அவருக்கு உங்கள் மேல் அதிகாரம் இருக்கலாம், ஆனால் அவரை ஆண்டவர் நியமித்த பின் நீங்கள் அவருக்கு கீழ்த்தான். அதாவது அவரின் ஆடு. அவர் மேல் உங்களுக்கு அதிகாரம் இல்லவே இல்லை. செம்மறி ஆடுபோல் அவருக்க பணிந்து அவர் சொற்படி அவர் காட்டும் புல்லை மேய்ந்து தேவன் அவர் மூலம் காட்டும் பாதையில் நடக்க வேண்டும். இப்படிப்பட்ட காரியத்தை இன்று காண்பது அரிது. இன்றைக்கு சபையிலே உட்கார்ந் திருக்கிற சிலர் இப்படிப்பட்ட நினைவுகளுடன் சவுலைப்போல் கீழ்ப்படியாமை குணத் துடன் இருப்பதை தேவன்காண்கிறார். நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியாது ஆனால் சர்வஞானியாகிய தேவன் உங்களை காண்கிறார். அதனால் தான் இன்றைக்கு என்மூலம் இந்த சபையை ஆண்டவர் அதட்டுகிறார். போதகர் சொன்னாலும் சொல்லட்டும் அவர் ஆலோசனை எனக்குத் தேவையில்லை. அவருக்கு கீழ்ப்படிய வேண்டிய அவசியம் எனக்கு இல்லை, அவரை விட எனக்கு எல்லாம் தெரியும்; என்ற சவுலைப்போல இருப பதை ஆண்டவர் காண்கிறார். ஆண்டவரின் சத்தத்திற்கு கீழ்ப்படியாத படியால் ஆண்டவர சவுலை புறக்கணிக்கிறார். 1 சாமுவேல் 15:23 நீர் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியால் அவர் உம்மை ராஜாவாக இராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார் என்றார். ஆண்டவர் அவனை புறக்கணித்து தள்ளின பிற்பாடும் அவன் சில காலம் ராஜா வாக இருக்கிறான். அவன் இன்னும் இஸ்ரவேலரை வழிநடத்துகிறான். அதேபோல் நாமும் சிலர் ஜெபிக்கிறோம். வேதம் வாசிக்கிறோம். ஊழியம் செய்கிறோம், தசமபாகம் காணிக்கை செலுத்துகிறோம், ஆனால் ஆண்டவர் சவுலை புறக்கணித்தே விட்டார். இன்றைக்கு ஆண்டவர் உங்களுடனே பேசின சத்தத்திற்கு செவிசாய்த்து கீழ்ப்படியாவிட்டால் உனக்கும் சவுலின் நிலைதான். கீழ்ப்படியாமல் போவாயாக இருந் தால் உனக்கு ஐயோ. ஆண்டவர் உன்னை புறக்கணித்து விடுவார். மத்தேயு 22:37–40 வரையிலும் ஆண்டவர் எமக்குத்தந்த பெரும் இரண்டு (2) கட்டளைகளை காண் கிறோம். இந்த இரண்டுக்குள்ளுமே பத்துக்கட்டளைகளுமே அடங்கியே இருக்கிறது. முதலாவது கட்டளை உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்மாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக.

இது எனக்கு ஆண்டவர் கொடுத்த தெரிவுக்குரிய காரியமல்ல. இது கடைப்பிடிக்க வேண்டிய கட்டளை. வேதம் வாசிக்க நேரமில்லை. ஜெபிக்க நேரமில்லை. ஆலயத்துக்குவர நேர மில்லை. கூட்டத்திற்குவர பஞ்சியாயிருக்கிறது. வகுப்பிற்கு போக வேண்டும் ரீயூசன் இருக்கிறது; என்று சொல்லுவோமாக இருந்தால் நாம் இந்த கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்கள் அல்ல. ஆண்டவர் கீழ்ப்படிவையே எதிர்பார்க்கிறார். இரண்டாவது கட்டளை உன்னிடத்தில் நீ அன்பு கூருவது போல பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக. இதுவும் தெரிவு அல்ல உன் நண்பர்களிடத்தில் அன்பு கூரு என்று ஆண்டவர் சொல் லாமல் பிறரிடத்தில் என்றே சொல்கிறார். அதாவது அயலான் எல்லாரிடமும் அன்பு கூர வேண்டும். எவ்வளவாய் உன்னில் நீ அன்பு செலுத்துகிறாயோ அவ்வளவு அதிகமாக மற்றவர்களையும் நேசித்தே ஆகவேண்டும். யாருடனும் கோபமாக, பகையாக, சண்டையாக, இருந்தால் நாம் இந்த கட்டளை களுக்கு கீழ்ப்படியவே இல்லை. இதற்கு கீழ்ப்படிவதை விட்டு ஜெபித்து, வேதம் வாசித்து சர்வாங்க தகனங்களும் பலி களும் செலுத்தினால் அது கர்த்தருக்கு பிரியமாயிருக்குமோ? ஆண்டவர் இதில் பிரியபபடவே மாட்டார். செவிகொடுத்தலே உத்தமமாம்.

பாவம் செய்யாதே என ஆண்டவர் சொல்லியிருக்கிறார். அதற்கு கீழ்ப்படியாமல் யாரும் பார்க்கவில்லை என்று பாவம் செய்தால் அது சவுலின் குணமே. ஆண்டவர் உன்னை புறக்கணித்து தள்ளி விடுவார். விபச்சாரம் செய்யாதிருப்பாயாக என்று வேதம் சொல்கிறது இது என்ன? தேவசபையில் இப்படி நடக்கிறதோ? யாக்கோப்பு 4:4 இல் பார்த்தால் உலகத்திற்கு சினேகிதனாய் ஒத்தவேஷம் தரித்தவர்களை ஆண்டவர் விபச்சாரரே விபச்சாரிகளே என்றே அழைக்கிறார். சங்கீதம் 1:1 இல் பார்க்கிறோம் துன்மார்க்கனுடைய ஆலோசனையில் நடவாமலும், தெளிவாக வேதம் சொல்கிற ஆலோசனையை தேவனிடமும் தேவதாசரிடமும் பெறவேண்டும். அதே வசனத்தில் பரியாசக்காரர் உட்காருமிடத்தில் உட்காராமல் என்று குறிப்பிடுகிறது. எதற்கும் இகழ்ந்து பேசுகிறவர்களாய் அசட்டைபண்ணுகிறவர்களாய் குறைகூறித்திரிந்தால் நீயும் சவுல். ஆண்டவர் உன்னை புறக்கணித்துவிடுவார். இப்படி பரியாசம் பண்ணிக் கொண்டு ஊழியரைக்குறித்து குறைகூறிக் கொண்டு சர்வாங்க தகனங்கள் அதாவது ஜெபித்து, வேதம், வாசித்து துதித்து, காணிக்கை, தசமபாகம் செலுத்தினால் ஆண்டவர் அதில் பிரியப்படவே மாட்டர். சவுல் தொடர்ந்து ராஜாவாக இருந்தது போல இன்னமும் ஊழியம் செய்து மற்றவர்களுக்கு புத்தி சொல்லி, துதிபாடல் பாடி, ஜெபித்து, வேதம் வாசித்துக் கொண்டு இன்னமும் இருக்கலாம்; ஆனால் ஆண்டவர் புறக்கணித்துவிட்டார்.

செம்மறி ஆட்டுக்கு இரண்டு அடையாளம் இருக்கவேண்டும். ஒன்று காதின் அடையாளம் – சொந்த மேய்ப்பனின் சத்தம் கேட்பது. இரண்டு காலின் அடையாளம் – சொந்த மேய்ப்பனை பின்பற்றுதல். எனவே உண்மையான செம்மறி ஆடு தன் உண்மையான சத்தத்திற்கு செவிசாய்த்து, தேவன் அந்த மேய்ப்பன் மூலம்காட்டும் பாதையில் அவர் பிறகே நடந்து, புல்மேய்ந்து, தண்ணீர் குடிக்கும். இன்றைக்கு என் மூலம் தேவன் தெரிவிக்கும் சத்தத்திற்கு செவிசாய்க்க முடியாதிருக்கிறதோ? மேய்ப்பர்களாகிய எங்கள சத்தம் கேட்டு தேவன் எங்கள் மூலம் உங்களுக்கு காட்டும் பாதையில் நடக்க முடியாதிருக்கிறதோ? அப்படியானால் நீ செம்மறியாடு அல்ல மாறாக கலகமுள்ள

வெள்ளாடே. இல்லாவிட்டால் நீ இந்த மந்தைக்குச் சொந்தமல்ல. நீ கேட்டு நடக்கக்கூடிய மேய்ப்பனை தேடிப்போய்விடலாம். இந்த மந்தைக்குள் இருந்தால் மேய்ப்பன் சத்தம் கேட்டு நடக்க வேண்டும். இல்லாவிட்டால் வேறு மந்தையை தேடிப்போய் விடலாம். ஆண்டவர் உன்னை இங்கு நியமித்திருப்பாராகில் சத்தத்தைக் கேட்டு அந்தப் பாதையில் நடந்து கீழ்ப்படி. இல்லாவிட்டால் ஆண்டவர் உன்னை புறக்கணித்து விடுவார். சிலர் ஆண்டவரால் புறக்கணிக்கப்பட்டதை உணராமல் இன்னும் ஆண்டவர் என்னுடனே தான் இருக்கிறார் என்று வேதம் வாசித்து, ஜெபித்து, ஆடிப்பாடித்துதித்து ஊழியம் செய்துகொண்டிருக்கிறோம். அது சவுலின் நிலையே. நியாயாதிபதிகள் 16 அதிகாரத்தில் சிம்சோனுடைய சம்பவத்தை பார்த்தால் அவன் ஒருவேசியைக் கண்டு அவளிடம் போகிறான். அவன் வேசியிடம் காலம் செலவிட்டு வாழ்ந்தாலும் கூட அவன் பெலம் குறுகிப்போகாமல் பெலிஸ்தரை மேற்கொண்டே வந்தான். அதே போல் பாவத்தில் விழுந்து அதை அறியாமல், தொடர்ந்து பலம் இருக்கிறது. தேவன் என்னுடன் இருக் கிறார், என நினைக்காதே சிம்சோனுக்கு நடந்தது போல ஒரு நாள் உனக்கும் நேரிடும். நித்திய நரகத்திலே தள்ளப்படும் நிலை ஏற்படலாம். ஜாக்கிரதை. இன்றைக்கு ஆண்டவர் தெளிவாக உங்களுடனே பேசுகிறார். கீழ்ப்படி! அதைவிட்டுவிட்டு உன் நன்மை யான காரியங்களில் அவர் பிரியப்படவில்லை.

இந்த வேதசத்ததைக் கேட்டும் அதை ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து இந் நிலையிலே போனால் உன் முடிவு பரிதாபம். உனக்கு ஐயோ. கொடிய நரகத்திலே நித்திய வேதனை அனுபவிக்க வேண்டிவரும். ஜாக்கிரதை நரகம் உனக்காக ஆயத்தமாக் கப்படவே இல்லை. இன்று ஆண்டவரின் சத்தத்தை அலட்சியப்படுத்தாதே. அடிக்கடி கடிந்து கொள்ளப்படும் தன் பிடரியை கடினப்படுத்துகிறவன் சடுதியிலே சகாயமின்றி நாசமடைவான். நீ நாசமடைய ஆண்டவர் விரும்பவில்லை. மனம் திரும்புகிற பாவியை ஏற்கவே ஆண்டவர் விரும்புகிறார். மத்தேயு 25இல் பத்து கன்னிகைகள் சம்பத்தில் அவர்கள் பத்துப்பேரும் மணவாளனை எதிர் கொள்ளும் கன்னிகைகளாகவே இருந்தனர். பத்துப்பேரும் ஒன்றாகவே தங்கினார்கள். ஆனால் மணவாளன் வந்தபோதுதான் யார் புத்தியுடையவர்கள், யார் புத்தியற்றவர்கள் என வெளிப்பட்டது. எல்லாரைப்போல் நாமும் சபையில் இருக்கலாம், ஜெபிக்கலாம், துதிக்கலாம் யார் உண்மையுள்ளவர்கள், யார் ஆயத்த முள்ளவர்னகள் என்பது கடைசி நாளிலே வெளிப்படும்.

உன் காலம் பிந்தியதாய் போவதற்கு முன் மனந்திரும்பு. தேவன் உன்னை புறக் கணித்து தள்ள முன் மனந்திரும்பு. இது உனக்கு தேவன் கொடுக்கும் கடைசி எச்சரிக கையாய் இருக்கலாம். பரலோக ராஜ்ஜியம் சமீபித்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை தவற விடாதே. இந்த சத்தத்தை கேட்டு மனந்திரும்பி உன்நிலையை மாற்றுவாயாய் இருந் தால் தேவன் திரும்பவும் உன்னை ஏற்றுக் கொள்வார். இன்றைக்கு இந்த சத்தத்திற்கு செவி கொடுக்காவிட்டால் உனக்கு ஐயோ! நரகத்தில் உன் முடிவு பரிதாபமாய் போகும் முன் மனந்திரும்பு. அவருடைய வருகை சமீபமாயிருக்கிறது.

போதகா : ஜோஹனன் பிலிப்

# சந்தா விபரம்

இச்சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும் விலாசத்தையும் தெளிவாக எழுதி சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பினால் சந்தாதாரர்களாகச் சேர்க்கப்படுவீர்கள்.

## சந்தா விபரம், (தபால் செலவு உட்பட)

| | |
|---|---|
| இலங்கை | S.L. Rs 130.00 Per Year |
| இந்தியா | S.L. Rs 250.00 Per Year |
| கனடா, அமெரிக்கா | S.L. Rs 400.00 Per Year |
| மற்றைய எல்லா நாடுகளும் | S.L. Rs 350.00 Per Year |

(காசோலை, காசுக்கட்டளை "சீயோன் தேவாலயம்" / **"ZION CHURCH"** என எழுதப்பட வேண்டும்.

குறிப்பு : தற்போது ஏற்பட்டுள்ள கடதாசியின் விலையேற்றம், தபால் செலவு அதிகரிப்பு என்பவைகள் காரணமாக சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளதை தெரிவித்துக் கொள்கின்றோம். நன்றி.

\- ஆசிரியர் -

சந்தாதாரராக விரும்பின் கூப்பனை தயார் செய்து அனுப்பவும்.

## சந்தா கூப்பன்

பெயர் : ____________________

விலாசம் : ____________ ____________

____________________

____________________

____________________

தயவுசெய்து சந்தா பணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

St. Joseph's Catholic Press, 360. Main Street,
Jaffna, Sri Lanka T. P. 021-222 2378

Zion Church Office
No. 347. Navalar Road,
Jaffna, Sri Lanka.

*To.*







TO

MISS.MATHANA GNANACHANDRAN
MADATHTHADY
ALVAI EAST,
ALVAI